★ இ. தொ. காவிலும் பிளவை ஏற்படுத்த முயற்சி

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 88 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 19 | இதழ்: 236
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 5-10-1991

[கொழும்பு]
"ஐ.தே.க. கட்சியில் பிளவை ஏற்படுத்தியதுபோல், எமது கட்சியிலும் பிளவை ஏற்படுத்த சில தீயசக்திகள்
- தொண்டமான்
(4ம் பக்கம் பார்க்க)

9 எம். பிக்கள் 7ம் திகதி கொழும்பு பயணம்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்திலிருந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட 9 ஈரோஸ் உறுப்பினர்களும் எதிர்வரும் 7ம் திகதி கொழு
(4-ம் பக்கம் பார்க்க)

12 வேங்கைகளின் எழுச்சிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]
லெப். கேணல் புலேந்திரன், குமரப்பா உட்பட 12 வீர வேங்கைகளின் 4ம் ஆண்டு நினைவுக் கூட்டம் இன்று சனிக்
(4-ம் பக்கம் பார்க்க)

இடைக்கால அரசு ஏற்பட்டால்

ஆதரவு அளிக்க சிறிமா தயார்!

மீண்டும் பிரதமராக விருப்பமில்லையாம்!!

(கொழும்பு)

இலங்கையில் ஓர் இடைக்கால அரசு ஏற்படுத்தப்படும்பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதனை ஆதரிக்கும் என ஸ்ரீ. ல. சு. கட்சியின் தலைவியும் எதிர்க்கட்சியின் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். ஆனால் தான் மீண்டும் பிரதமர் பதவியை ஏற்க விரும்பவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் தொடர்பாகச் சில கோரிக்கைகளை ஸ்ரீ ல. சு. கட்சி சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இதன் மூலம் இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறை நீங்கி நாடாளுமன்ற ஆட்சிக்கு வழிகோல நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆட்சிமுறை மாற நேரும் பட்சத்தில் எதிர்த்து நின்ற ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீ ல. சு. கட்சி கூட்டணி அரசு அமைக்கவேண்டி ஏற்படலாம்.

மேலும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக எதிர்க்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரரணை வெற்றி பெறும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டென்றும் அவர் தெரி
(4-ம் பக்கம் பார்க்க)

உணவுபொருள்கள் விலைகள் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கிப் பெருந்தொகையான லொறிகள் உணவுப் பொருள்களுடன் வருவதையொட்டி அரிசி, சீனி, மா மற்றும் சவர்க்கார வகைகள், பால்மாவகைகள், தேங்காயெண்ணை, மண்ணெண்ணை போன்ற பொருள்களின் விலையில் நேற்றுப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. திருநெல்வேலி, கல்வியங்காடு, குருநகர், யாழ் கட்டாக்காடு, ஆனைக்கோட்டை, கல்
(4ம் பக்கம் பார்க்க)

ரயில் பிரயாணிகள் தினமும் துன்புறுத்தல்

(கொழும்பு)
கொழும்பு - வவுனியாவுக்கு இடையில் நடைபெற்று வரும் "மாத் தேவி" ரயிலில் பயணம் செய்யும் தமிழ் பயணிகள் ரயிலிலே பாதுகாப்பு ஊழியர்களினால் தினமும் துன்
(4ம் பக்கம் பார்க்க)

தனியார் கல்வி நிறுவனங்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)
லெப். கேணல் புலேந்திரன் குமரப்பா உட்பட 12வீரவேங்
(4-ம் பக்கம் பார்க்க)

இடைத்தேர்தலில் சோனியா போட்டியிடுவாரா?

(புதுடில்லி)
இந்தியாவில் அடுத்த மாதம் 15ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் திருமதி சோனியா காந்தி போட்டியிடுவாரா என்பது குறித்து மர்மமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

16 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 15ம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது இத்தேர்தலில் இந்தியப் பிர
(4-ம் பக்கம் பார்க்க)

அரசுக்குஎதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிச்சயம் தோல்வியுறும்

- சிறிசேனகுரே

(கொழும்பு)
அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயமாகத் தோல்வியுறும் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், ஐ. தே. க. வின் பொதுச்செயலாளருமான சிறிசேனகுரே தெரிவித்தார் எம். பி.க்களிக் பெருந்தொகையானோர் அரசையும் ஜனாதிபதியையும் ஆதரித்து நிற்கிறார்கள். ஆதரிப்பதாக உறுதி மொழியும் அளித்துள்ளார்
(4ம் பக்கம் பார்க்க)

கட்டுப்பெத்த

தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ் மாணவர் புறக்கணிப்பு

(கொழும்பு)
மொறட்டுவ, கட்டுப்பெத்த தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ் மாணவர்களின் அனுமதி புறக்கணிக்கப்பட்டு வருவதாகஅமைச்சர் எஸ். தொண்டமான் குற்றம் சாட்டியுள்ளார்.

கட்டுப்பெத்தயிலுள்ள இலங்கை-ஜேர்மனி கூட்டுத் தொழில்நுட்பக் கல்லூரியில் வருடாவருடம் அனுமதி பெறும் 275 மாணவர்களும்
(4-ம் பக்கம் பார்க்க)

'ஒபரேஷன் நாரை' முடிவுற்றது

(கொழும்பு)
'ஒபரேஷன் நாரை' என்னும் பாதுகாப்பு நடவடிக்கையே அண்மையில் தமிழக கரையோரக்களில் மேற்கொள்ளப்பட்டதாக தமிழ்நாடுபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் தெரிவித்தார்.

தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் கரையோர மாவட்டங்களில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மண்ணெண்ணை லொறிகள் யாழ். வருகின்றன

(பூநகரி)
கொழும்பிலிருந்து 10க்கு மேற்பட்ட மண்ணெண்ணை லொறிகள் யாழ்ப்பாணம் நோக்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பூநகரியில் 5மண்ணெண்ணை லொறிகள் யாழ்ப்பாணம் வருவதற்காக தரித்து நிற்கின்றன, இதேவேளையில் வவுனியாவில் அனுமதிக்காக மேலும்
(4-ம் பக்கம் பார்க்க)

மாகாணசபை முடிவுக்கு ஆட்சேபம்!

(கண்டி)
கண்டி மாவட்டத்திலுள்ள பள்ளேகெல ரஜவெல்ல தோட்டத்தில் 195 ஏக்கர் நிலத்தைப் பிரஜாவுரிமை பெற்ற தமிழர்களுக்குப் பகிர்ந்தளிக்க மத்திய மாகாண சபையில் அண்மை முடிவு செய்யப்பட்டது.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்து ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் பலிபான
(4ம் பக்கம்பார்க்க)

வரி விளம்பரம்

வாழ்த்து மடல்கள்

வந்துவிட்டன! வாழ்த்து மடல்கள்!! தித்திக்கும் தீபாவளி வாழ்த்து மடல்களை எதிர்பார்க்கும் வாங்கி அனுப்பிட இன்றே விஜயம் செய்யுங்கள்: சோபிதா, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் [சி-5439]

சோதிடம்

ஜாதகம் கணிக்க அதிர்ஷ்ட நம்பரில் பெயரமைக்க பலா பலன்களறிய வேண்டிய சோதிடர் ஆ. சிவராசா 102 B அரசடி ரோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (சி-5441)

வகுப்புக்கள்

ஆண்டு 5திற்கு பிரபல பாடசாலைகளுக்கான அனுமதிப் பரீட்சை மாதிரி வகுப்புகளும் ஆண்டு 4திற்கு புலமைப் பரிசில் மாதிரி வகுப்புகளும் ஆண்டு 6, 7, 8 திற்கு சகல பாடங்களும் சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5442)

ஆங்கிலக் கல்வி

இலைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு நேரில் சனி, ஞாயிறு காலை 11-00 - 12-00 மணி. S. ஜெயராசா 204, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [சி.4962]

ஹெலியிலிருந்து பிரசுரம்

[புலோலி]

வடமராட்சி கிழக்கிலுள்ள செம்பியன்பற்றுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை 'ஹெலி' ஒன்று வானத்தில் வட்டமிட்டு துண்டுப்பிரசுரங்களை வீசியது.

இத்துண்டுப் பிரசுரங்கள் யாவும் காற்றோடு சென்று கடலுக்குள் வீழ்ந்தன. [61]

உதவிப்பணம்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்குரிய அரசாங்க சகாயப்பணம் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்களினால் வழங்கப்படுவதாக மேலை உதவி அரசாங்க அதிபர் செல்வி ஜீ. அனைமயில் தெரிவித்தார்.

தற்காலிக நிறுத்தம்

[மானிப்பாய்]

யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 1954ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதிக்குப் பின் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பப் படிவங்கள் வையேற்பது இம்மாதம் முதலாம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

இதேவேளை இந்த ஆண்டிற்கு முன் பிறந்தவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. (71)

புளியந்தீவில் அதிகாரியும் 4 படையினரும் காயம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு புளியந்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலொன்றில் ஒரு இராணுவ அதிகாரியும் நாலு படையினரும் படுகாயமடைந்தனர்.

இப்பகுதியில் ரோந்து வந்த படையினரைப் புலிகள் இடைமறித்து தாக்குதல் நடாத்தினார்கள்.

முன்னாள் அம்பாறை மாவட்ட தளபதி மேஜர் அன்ரனியின் 1-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

கரபந்தாட்டம், மென்பந்தாட்டம் வலைபந்தாட்டப் போட்டிகள்

1. கரபந்தாட்ட (ஓவர்கேம்) சுற்றுப்போட்டி
2. 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான "6-ஓவர்" மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி
3. பெண்களுக்கான வலைபந்தாட்டச்சுற்றுப்போட்டி.

விண்ணப்ப முடிவுதிகதி: 8-10-91 (செவ்வாய்)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

செயலாளர்
ஈச்சமோட்டை சனசமூக நிலையம்
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5440)

யாழ்பபாணப் பல்கலைக்கழகம்

1990 1ம், 2ம், 3ம், 4ம் கல்வியாண்டு பரீட்சைகள்

விஞ்ஞான பீடம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன என்பதை மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

பரீட்சை	தொடங்கும் திகதி	முடிவடையும் திகதி
1ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை	21-10-91	26-10-91
2ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை	28-10-91	04-11-91
3ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை	31-10-91	09-11-91
4ம் ஆண்டு பரீட்சை	11-11-91	20-11-91

மேல் வரிட்சார்த்திகள் தங்கள் பரீட்சைக் கால அட்டவணையைப் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் பார்க்கவும். அல்லது பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை சிரேஷ்ட மாணவ ஆலோசகர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்

(எ-1625)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1991-10-04இல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக,

தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்

தரம் 11

பதவிக்கான விண்ணப்பங்கள் மட்டுமே கோரப்பட்டுள்ளன. ஆங்கிலப் போதனாசிரியர் தரம் II இற்கான விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

தற்காலிக [ஆங்கிலப் போதனாசிரியர் தரம் II இற்கான சம்பள அளவுத் திட்டம்: ரூபா 3,500/- (நிலையானது) மாதம் ஒன்றிற்கு.

மேற்படி தகவற்காக மிகவும் வருந்துகின்றேன்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-10-04

(ஏ 1627)

யாழ். மாவட்ட

அரச ஓய்வூதியர் சங்கம்

இச்சங்கத்தினால் கீழ்க்காணும் இடங்களிலும் தினங்களிலும் அவ்வப்பகுதி அங்கத்தவர்களும் மற்றும் ஓய்வூதியர்களுக்கு கருத்தரங்கும் கலந்துரையாடலும் காலை 9-00 மணிக்கு இடம்பெறும்

06-10-91 ஞாயிறு இரத்தினேஸ்வரி வித்தியாலயம் அச்சுவேலி

13-10-91 ஞாயிறு மத்திய மகாவித்தியாலயம் நெல்லியடி

20-10-91 ஞாயிறு அருணோதயக் கல்லூரி அளவெட்டி

முக்கிய குறிப்பு: சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் அடுத்துவரும் 27-10-91 ஞாயிறு யாழ். பிரதான வீதியில் உள்ள புனித யாகப்பர் ஆலய முன்றலில் அமைந்துள்ள யாகப்பர்மண்டபத்தில் காலை 9-30 மணிக்கு கூடும். அங்கத்தவர்கள் தவறாது சமுகம் தரவும்.

அ. வி. அ. ஜெ. விஜயரட்ணம் — தலைவர்
சி. மு. தியாகராசா — கௌரவ செயலாளர்

(சி-5443)

நான்காம் ஆண்டு நினைவலைகளில்!

மறவோம்! மறவோம்!! இவர்களை மறவோம்!!!

இந்திய - இலங்கை கூட்டுச் சதியால் புலாலியில் வீரமரணமேற்று
திருவில் திடலில் தியாகிய

லெப். கேணல் குமரப்பா — லெப். கேணல் புலேந்திரன்

அப்துல்லா, ரகு, நளன், ஆனந்தக்குமார், மிரேஸ், அன்பழகன்,
றெஜினோல்ட், பழனி, கரன், தவக்குமார்
ஆகிய
எம் மண்ணின் மகத்தான தியாகிகளை
எம் நெஞ்சம் உள்ளவரையில் மறவோம்!

- வடமராட்சி கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்பு ஒன்றியம்

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(ஏ-1626)

சமுத்திரா கடலுணவு தயாரிப்பு

உள்ளூர் உற்பத்தியில் ஒரு சாதனை!

வடபகுதியில் உள்ள வளங்களில், கடல் வளம் மிகவும் முக்கியமானது இதனைச் சரியான முறையில் பயன்படுத்தி இதன் மூலம் தமிழீழத்தின் கடலுணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் ஏற்றுமதிக்கும் பயன்படுத்திப் பொருளாதார நிலையை மேம்படுத்தலாம். தற்போதைய சூழ்நிலையில் இதனைப் பயன்படுத்த முன்வருவோர் மிக மிகக் குறைவு. இதற்கு நாட்டு நிலைமையும் ஒரு காரணமாய் இருக்கலாம்

தற்போதைய உணவுத் தட்டுப்பாட்டுக்குக் கடலுணவை நேரடியாகவும், அதனைப் பிற வடிவங்களுக்கும் மாற்றிப் பெற்றுக்கொள்ளலாம். நாட்டு நிலைமை காரணமாகத் தமிழீழத்தின் பெருமளவு கடல் பகுதியை எமது உணவுத் தேவைக்குப் பயன்படுத்தமுடியாத ஒரு தூர்ப்பாக்கிய நிலை எறிபட்டுள்ளது கவலைக்கு உரியதே

பொருளாதாரப் பாதிப்பு

இராணுவ நடவடிக்கை காரணமாக ஆயிரக்கணக்கான மீனவர்கள் தமது தொழில்களை இழந்ததுடன், தொழில் சாதனங்களையும் இழந்து, அகதிகளாக முகாம்களில் துன்பமடைந்த நிலை, தமிழீழத்தின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, தற்போது வடபகுதியில் கடற்றொழில், போக்குவரத்து இன்மை காரணத்தால் பல நாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது சில பகுதிகளில் மீனின் விலை மிகக் குறைவாகவும், சில பகுதிகளில் மிக அதிகமாகவும் இருக்கிறது. சந்தைப்படுத்தும் வாய்ப்பில் ஏற்பட்ட தடங்களே இதற்குரிய காரணமாகிவிட்டது.

இந்த நிலையில் புரத உணவுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை நீக்க, கடலுணவைப் பதப்படுத்தி, சேமித்துச் சந்தைக்கு வரவிடுவதன் மூலம் புரத உணவு கிடைக்கிறது. எமது மூலவளமும் பயன்படுகிறது. தொழில் வாய்ப்பு ஒன்றும் உருவாக்கப்படுகிறது.

இத்தொழில் வாய்ப்புக்கு விடுதலைப் புலிகளின் உதவியுடன், சில இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சி இன்று ஒரு நிறுவனமாக உருவெடுத்துத் தனது உற்பத்தியை ஆரம்பித்துத் தமிழீழத்தின் விலைபொருளைச் சந்தைப்படுத்தவும் ஆரம்பித்துள்ளது

சமுத்திரா கடலுணவு உற்பத்தி நிலையம்

சுழிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'சமுத்திரா கடல் உணவு உற்பத்தி நிலையம்' இன்று தனது திறப்பு விழாவைக் காண்கிறது. விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப வித்துக்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வீரவேங்கைகளின் எழுச்சித் தினத்தில், தனது திறப்பு விழாவைக் காணும் சமுத்திரா கடல் உணவு உற்பத்தி நிலையம் எதிர்காலத்தில் பல சாதனைகளை நிலைநாட்ட இது ஓர் ஆரம்ப விழாவாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்க தளபதிகளான லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 4-வது ஆண்டு நினைவு நாளின் எழுச்சி தினமான இன்று சுழிபுரத்தில் சமுத்திரா கடலுணவு உற்பத்தி நிலையம் திறந்துவைக்கப்படுகிறது.

நிர்வாகம்

இந்த நிலையத்தை நான்கு இளைஞர்களே திட்டமிட்டு, செயல்முறைப்படுத்தி, நிர்வகித்துவருகிறார்கள். இதன் இயக்குநர் திரு. இ. நற்குணவிங்கம், பொது முகாமையாளர் திரு. வி. மனோகரன், உற்பத்திக் குழுத் தலைவர் திரு. க. இராமச்சந்திரன், இதன் திட்டமிடல் செயல்முறை அதிகாரி திரு. வி. ஆனந்தஜெயக்குமார்.

இவர்களை நாம் சந்தித்த போது மிகத் தன்னம்பிக்கையுடன், எமது எதிர்காலப் பொருளாதார அபிவிருத்தி குறித்தும், தாம் இதனை ஆரம்பித்த காரணம் குறித்தும் மிக விரிவாக விளக்கினார்கள். சிறந்த முறையில் இவர்கள் தமது விளக்கங்களையும், திட்டங்களையும் கூறியதுடன், இந்த முயற்சியின் முக்கியத்துவம் குறித்தும் ஆழமாக விவாதித்தனர்.

கடல் வளத்தைப் பயன்படுத்த வேண்டும்

இது பற்றி திரு. குணவிங்கம் மிக விரிவான விளக்கங்களைத் தந்தார். அவருடன் திரு. ஆனந்த ஜெயக்குமாரும் பல சந்தேகங்களை நீக்கினார். முதலில் கடல் வளம் சரியாகப் பயன்படுத்தப்படவேண்டும். பின்னரே வேலைவாய்ப்பு என்பதே தமது முக்கியமான நோக்கம் என்றார்கள் அவர்கள் மேலும் கூறுகையில்;

எமது தேவைகளைவிட, அந்நியத் தேவைக்கே கடலுணவு பதப்படுத்தப்பட்டு 'கருவாடு' வெளிநாடுகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்டு வந்தது முதலில் எமது தேவையைப் பூர்த்திசெய்வோம். சிறந்த வருமானம் கிடைக்கும் போது பல கடல் சார்ந்த தொழிலமையங்கள் உருவாகும்

ரி. சிவகணேசன்

உள்ளூர்த் தேவைக்காகப் புதிய முறையில் மீனைப் பதனிடவேண்டும். இது முதலில் பாவனைக்கு வரும்போது மக்கள் ஏற்கத் தயங்குவார்கள். மேலும் புதிய முறையில் எம் மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் சரியான முறையில் பதனிட்டு வழங்கத் திட்டங்கள் தயாரிக்கிறோம். இதற்காக நாங்கள் வாழ் பல்கலைக் கழகத்தின் உதவியையும் நாடியுள்ளோம்.

தொழில் வாய்ப்பு

தற்போது இந்த நிலையத்தில் நேரடியாக 13 பேரும் மறைமுகமாக எண்மரும் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். எமது தயாரிப்புகளிற்கு சிறந்த வரவேற்பு கிடைக்கும் போது விரைவில் உற்பத்தி நிலையத்தின் முதலீட்டை அதிகரித்து பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவோம்.

முதலீடு

எமது கடலுணவு பதனிடும் நிலையம் ஐந்து லட்சம் ரூபா முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது இந்தப் பணத்தை விடுதலைப் புலிகளே எமக்கு தந்துதவினார்கள். இதுவரை இந்த நிலையத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கிய பங்களிப்பு மிகப்பெறுமதியானது. இதன் போது யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. ராஜன் தமக்கு வழங்கி வரும் மிகுந்த ஒத்துழைப்பையும் ஆதரவையும் பலதடவை குறிப்பிட்டார்கள்.

மீன் புரதஉணவு

தற்போது நாங்கள் தாவர மீன் புரத உணவுகளை பலவடிவங்களில் பைக்கற்றுகளில் அடைத்து சந்தைப்படுத்தி வருகிறோம். இவற்றின் தரத்தில் எமக்கு நல்ல நம்பிக்கை உள்ளது. மேலும்மேலும் இதன் தரத்தை உயர்த்தி சர்வதேச தரத்திற்கு நாம் எமது தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் காலம் மிக விரைவில் வரும் என்றார்கள்

சராசரி ஒரு நாளைக்கு தற்போது 100 கிலோ மீன் பதனிட்டு வெளிவருகிறது இதற்காக ஒரு நாளைக்கு 150 முதல் 200 கிலோ மீன் கொள்வனவு செய்கிறோம். முதலில் நாமே பல இடங்களுக்கு சென்று கொள்வனவு செய்தோம் தற்போது எமது தயாரிப்பிற்கு நிலையானவர்கள் தாமாகவே முன் வந்துகொள்வனவு செய்து தருகிறார்கள்.

உள்ளூர் தயாரிப்பு

நாம் இந்நிலையத்தை ஆரம்பித்து 9மாதங்களாகிவிட்டது. 6 மாதமாக எமது தயாரிப்பை சந்தைப்படுத்தி வருகிறோம். முழுமையான புரத உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காக மீனையும், கௌபியையும் பயன்படுத்துகிறோம். இதற்காக உள்ளூர் தொழில் நுட்பங்களையே நாம் பயன்படுத்தி வருகிறோம் பதனிடும் பொருட்கள் பல மாதங்களுக்கு பழுதடையாத விதத்தில் 'உள்ளூர் தயாரிப்புக்களை' பயன்படுத்தியே மிகச் சிறப்பாக மேற்கொள்கிறோம்

இந்த உள்ளூர் பாதுகாப்பு முறை எமது கண்டுபிடிப்பின் திறமையே எனக்கூறவேண்டும்: தற்போது நாங்கள் பைக்கற்றுகளில் அடைத்து மூன்று நாலுவகை உணவுப் பொருட்களை சமுத்திரா தாவர மீன் புரதத்தையும் மீன் மசாலாப் பொடியையும் சந்தைப் படுத்தி வருகிறோம். இதற்கு பல மீன் இனங்களை பயன் படுத்துகிறோம்.

எமது தேவைக்கு முதலில் மாதகல், காரைநகர், தீவகம், சுழிபுரம் கடற்பகுதியிலிருந்து பெருமளவு மீன் வகைகளை எதிர்பார்த்தோம். ஆனால் நாட்டு சூழ்நிலை காரணமாக தற்போது குருநகர் இலுப்பை கடவையிலிருந்து எமது தேவைக்கு மீன் வகைகளை பெறுகிறோம்.

நாட்டுச்சூழ்நிலை சாதகமாக வரும்போது தனித்தனி மீன் இனங்களை பயன்படுத்தி பதனிடுவோம் நன்னீர் மீன் பாவனைக்கும் முயற்சிக்கிறோம் அதில்விரைவில் வெற்றிகிடைக்குமென எதிர்பார்க்கிறோம். தற்போது எமது தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கிறது. போதிய மீன் பரம் கிடைக்கும் போது எமது முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்குமென நம்புகிறோம்.

மீன் தூள்

மீன்களைப் பதனிடும்போது அகற்றப்படும் முள்ளையும், செதிளையும் தனியாக எடுத்து அரைத்து, 'மீன் தூள்' எனக் காக்நடை உணவாகச் சந்தைப்படுத்துகிறோம் இது கோழி, தாவது—ன், பால் மாடுகளுக்குத் தனிட்டுடன் 10 வீதம் சேர்த்து கொடுக்கும் போது நல்ல பலனைப் பெறலாம்.

தங்களின் பிரதான நோக்கங்கள் குறித்து திரு. மனோகரன் தெரிவிக்கையில் கடல் வளத்தைப் பயன்படுத்துதல், பதனிடல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தல், உள்ளூர்த் தேவையைப் பூர்த்திசெய்தல், உணவின் புரத விகிதாசாரத்தை அதிகரித்தல், உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தல், புதிய தொழில் நுட்பங்களைக் கண்டுகொள்ளல், சந்தைப்படுத்தலில் புராதன முறையை மாற்ற முயற்சித்தல், புதிய தொழில் வாய்ப்பைக் கண்டுகொள்ளல், கடலுணவுத்தயாரிப்பை இலகுவாக்கல்நிலையான சந்தை வாய்ப்பைப் பேணல், இலகுவாக மீன் உணவு மக்களை அடையச் செய்தல் என்பனவே என்றார்.

உள்ளூர் உற்பத்திக்கு புலிகள் ஊக்கம்

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த எந்தவொரு தொழிலையும் ஆரம்பிப்பதாகட்டும், விடுதலைப் புலிகள் பக்கபலமாய் நின்று சகல உதவிகளையும் வழங்கித் தயாராக உள்ளனர் இந்த மண்ணின் வளத்தைப் பயன்படுத்தி, அதன் மூலம் எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்வருபவர்களை நாம் மதிக்கிறோம். அவர்களையே நாம் முதலில் இந்த மண்ணின் மைந்தர்களாய்ப் பார்க்கிறோம் என்றார் எங்களுடன் உடனிருந்து சகல நிகழ்வுகளையும் அவதானித்துக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன்.

வணிக தின விழா

[சாவகச்சேரி]

வணிக தின விழா கடந்த வாரம் சாவகச்சேரி டிறிபோக் கல்லூரியில் கல்லூரி வரலாற்றுக் ஆசிரியர் தா. பாலசுந்தரம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ம. புவனேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இவ்விழாவையிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

0 0 0

(யாழ்ப்பாணம்)

கோட்டடி நமசிவாய வித்தியாலயம், நாவாந்துறை றோ. க. வித்தியாலயமும் இணைந்து வணிகதினவிழாவை நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடாத்தினர். விழாவில் கண்காட்சியும்இடம் பெற்றது (வி)

இவரெல்லாம் ஆசிரியர்!

மோயீசன் என்கின்ற மோனைத் தலைவனுக்கும்
ஆவபத்துக் கற்பனையை அன்று எழுதக் கற்பித்த
தந்தை இறைவனவன் தான், தலைமை ஆசிரியன்!
மைந்தன் இயேசு மலைப்பொழிவால், போதனையால்
இந்த உலகின் இணையற்ற ஆசிரியன்!
கேளாத மணி வாசகங்கள் கேள்! என்று பார்த்தனுக்கும்
ஓதிய அக் கண்ணபிரான் ஒப்பற்ற ஆசிரியன்!
போதி மர நிழலியே 'புத்' தொளியாய் ஞானஒளிச்
சோதி பெற்ற புத்தர் பிரான் நீதி சொற்ற ஆசிரியன்
'அல்லாஹு அக்பர்' என 'வல்லோன் இறைவன்' என
'பொய்லாச் சிலையைப் புறத்தே எறியும்' என
நல்வாக்குச் சொல்லி நடைமுறையில் கற்பித்த
நபிகள் நாயகம் (ஸல்)லும் நல்லதோர் ஆசிரியர்!
தற்புதுமை வாய்ந்த தமிழ்க் கருத்துரையை
அற்புதமாய்க் கோத்தே, அதை எமக்குக் கற்பித்த
வள்ளுவனார், வாழும் வழிசொன்ன ஆசிரியன்!
செவ்வையாய் எங்கள் சிறுவனுக்குக் கற்பித்த
ஔவை யார்?
ஔவையார்!
ஔவையார் அக்காதான்! அவரும் நல் ஆசிரியர்!
இந்தக் குடிவழியில் மரபிலே வந்தவர் நாம்!
செந்தமிழும் ஆசிரியர் சீதனந்தான் கண்டியளோ!

- சத்தியசீலன்

ராசி பலன்

05-10-1991

சனிக்கிழமை

தமிழுக்கு புரட்டாதி 19

அவாதசி காலை 7.50 வரை; மகம் மு. ப. 11.23 வரை, இராகுகாலம் காலை 9.02 முதல் 10.32 வரை, எமகண்டம் மாலை 3.02 முதல் 4.32வரை, அமிர்தசித்தயோகம் சனிப்பிரதோஷவிரதம்.

மேடம்:- குழந்தையுள்ளம், மனக்கசப்பு, உபகாரம்.

இடபம்:- எண்ணிக்கோகம், வகுப்புவாதம், துயரம்

மிதுனம்:- நண்பர் பகை, வதிவிடமாற்றம், மனச்சுமை.

கடகம்:- நண்பர் பகை, வதிவிட மாற்றம், மனச்சுமை.

சிங்கம்:- விருந்து வைபவம், கருத்து பரிமாறல். புகழ்.

கன்னி:- மனக்குழப்பம், வேண்டாத தொல்லை, அசதி.

துலாம்:- குடும்ப மகிழ்ச்சி, குதூகலம் காரியசித்தி

விருச்சிகம்:- தெய்வீக செலவு, நண்பர் உதவி, பண வரவு

தனுசு:- குழப்பமனதால், தடுமாற்றம், வைத்தியசெலவு

மகரம்:- குடும்பகௌரவம், திடீரகிதைத, வெகுமதி.

கும்பம்:- கருத்து மோதல் தவாளசிந்தை, விதண்டாவாதம்.

மீனம்:-தொழிலாளர்கள், பொதுப்பணி, தானதர்மம்.

ஜோஸ்யர்

அளவைகள் முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

யாழ். செயலக உள்நாட்டு வர்த்தகவிரிவின் நிறுவை அளவை பகுதியினரால் இம்மாதம் 7-ம், 8-ம் 10-ம் திகதிகளில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்வேலை நடத்தப்படவிருக்கிறது. [154]

கொழும்பில் உள்ள ஈரோஸ் உறுப்பினர் எமக்கு எதிராக செயற்படுகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

"கொழும்பிலுள்ள ஈரோஸ் உறுப்பினர்கள் எங்களுக்கெதிராகச் செயல்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் நாம் அதற்குரிய வழியில் செயல்படவேண்டியுள்ளது. அதனால் தான் நாம் 'ஈரோஸ்' நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி, யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை தமிழாசிரியர் சங்க 'ஆசிரியர் தின' விழாவில் வேலம்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது: நான் சில தினங்கள் இங்கில்லாதபோது பேச்சுவார்த்தைக்குப் போய்விட்டதாக ஒரு கதைகூடப்பரவியிருந்தது.

இன்று எமது போராட்டத்தில் பதினான்கு வயது, பதினைந்து வயது மாணவர்களது இணைகிறார்கள்: அவர்களில் சிலர் வீரமரணமடைகிறார்கள். இவர்களுக்கான 'தமிழீழ படைத்துறை பள்ளி' என்ற பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அங்கு அவர்களுக்குக் கல்வி போதிக்கப்படுகிறது. வரலாறு போன்ற பாடங்கள் படிப்பிக்கப்படுகின்றன.

தென்னிலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இனவாதம் பேசப்படுகிறது; ஆட்சிப்போட்டி நடைபெறுகிறது.

அன்று ஈரோஸ் அமைப்பு புதிய புதிய ஆயுதங்களை அள்ளிக்கொடுத்தது. ஆனால் ஈரோஸ், புலிகளுக்கு எதிராக செயல்படவில்லை. துரோகம் புரியவில்லை. அவர்கள் கடந்த வருடம் எங்களோடு இணைந்தார்கள்.

எமது தலைவர் குமரப்பா, புலேந்திரன் நினைவஞ்சலிக் கூட்டத்தில் ஒரு பிரகடனம் செய்தார். கடற்படையணி அமைக்க வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்துக்கமைய இன்று செயல்பட்டு கடற்புலிகள் இரண்டு பீரங்கிப் படகுகளைத் தாக்கி அழித்துள்ளார்கள்.

எங்களுக்கென்று சொத்துக்கள் கிடையாது. வீடு வாசல்கள் இல்லை. தலைவர் தொடக்கம் போராளிகள் வரை எங்களிடம் இருப்பது உணவும் இந்த உடையுமே ஆகும்."

புதிய பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக்கு புதிய பொறுப்பதிகாரியாக திரு. கிளாவ்டிஜாவ் நியமிக்கப்பட்டுள்ளார். (வி)

கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்தியாளர்களின் தலைவர், செயலாளர் கலந்துகொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிறு பி ப. 2-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் தவறாது சமுகம் தரும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

உணவுப் பொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞகம், நல்லூர் போன்றஇடங்களில் சவர்க்காரவகைகள் தேங்காய்எண்ணை சீனி கிஸ் பிறே போன்றவை குறைந்த விலைக்கு விற்கப்பட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது.

வவுனியாவிலும்படையினர், மக்கள் சவர்காரர வகைகளை சற்றுக் கூடுதலாக எடுத்துச் செல்வதற்கு அனுமதித்தாகத் தெரியவருகிறது. (56)

இன்று மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 4-ம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி இன்று (5-ம் திகதி) சகல பிரயாண அனுமதி வழங்கும் அலுவலகங்களும் மூடப்படுமென தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப்பிரிவு அறிவிக்கின்றது.

இடைத்தேர்தலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமரி நரசிம்மராவ் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் சோனியா போட்டியிடுவாரா என்பது குறித்து மர்மமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி சோனியா காந்தியை இத்தேர்தலில் போட்டியிடுமாறு இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் வற்புறுத்தி வருகின்றபோதும் அவர் மறுத்துவருகிறாராம்.

12 வேங்கைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் சதுக்கத்தில் வடமராட்சி மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா தலைமையில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது [இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா சிறப்புரையாற்றுவதுடன் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் உரையாற்றுவார்கள்.

கூட்டத்தினபின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. (வி)

கட்டுப்பெத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனவிதாசார அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டு வந்துள்ளார்கள்.

இவ்வருடம் நடைபெற்ற அனுமதிப் பரீட்சையில் கூடுதலான தமிழ் மாணவர்கள் தோற்றியிருந்தபோதிலும், 12 தமிழ் மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம். இதே நேரம் 213 சிங்கள மாணவர்களுக்கு அங்கு இடம் கிடைத்துள்ளது.

இப்பரீட்சைமுடிவுகளைமீள்பரிசீலனை செய்யும்படி, அமைச்சர் தொண்டமான், யோக்கு வரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. விஜயபாலமெண்டிசுக்கு அவசரக்கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

மாகாணசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீசந்தானந்த தேரர் கடிதமொன்றை அனுப்பியிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

மண்ணெண்ணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

8 மண்ணெண்ணை லொறிகள் தரித்து நிற்கின்றன. இந்த லொறிகள் எந்த நேரத்திலும் யாழ் வந்தடையலாம் எனவும் அதனையடுத்து மண்ணெண்ணை விலை பெருமளவு வீழ்ச்சியுறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (23)

இ. தொ. கா.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது முன்னேறி வருகின்றன."

இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், உள்ளூர - கிராமிய தொழில்துறை அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் நுவரேலியாவில் தெரிவித்துள்ளார்.

இவ்வளவுகாலமும் அசைக்க முடியாத நிலையிலிருந்த ஐ. தே. கட்சியில் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிந்து சென்றதினால் அக்கட்சி தற்போது பிளவுபட்டு இருக்கிறது. 50 வருடங்களாக ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் இருந்து வரும் எமது கட்சியை எந்த தீய சக்திகளாலும் சீர்குலைத்து விட முடியாது என அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார். (வி)

9 எம். பிக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ம்பு செல்கின்றனர்.

8ம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது மேற்படி உறுப்பினர்கள் அனைவரும் அங்கு சமுகமளித்திருப்பர். இவர்களுக்கு கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு செல்லவிருக்கும் ஒன்பது சுயேட்சை (ஈரோஸ்) உறுப்பினர்களில் இரு பெண்களும் அடங்கி யிருக்கிறார்கள்.

கடந்தவாரம் தெரிவுசெய்யப்பட்ட ஆறுபேருடன் நேற்று மேலும் மூன்றுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

திலகவதி இரங்கசாமி (புதுக்குடியிருப்பு)

தமயந்தி சிவசுந்தரலிங்கம் (வவுனியா)

சோணமலை மாதவராசா (தம்பலகாமம்) (வி)

அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள். அரசுக்கு கிடைக்கவிருக்கும் வெற்றியினால் எதிரணியினருக்கு பெருத்த ஏமாற்றமும் அதிர்ச்சியும் காத்திருக்கிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

தனியார் கல்வி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளின் 4ம் ஆண்டு நினைவு எழுச்சி தினத்தில் பங்குகொள்ளும் முகமாக சகல தனியார் கல்வி நிறுவனங்களும் இன்று 5ம் திகதி தமது நிறுவனங்களை மூடி எழுச்சி ஊர்வலத்திலும், தீருவில் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது.

இடைக்கால

1-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளார். ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஆதரவாக இருந்த எம்பிக்களில் 11 எம். பிக்கள் பிரேமதாசாவுக்கு எதிராக குரல்கொடுக்கத் தொடங்கியுள்ளனர். எல்லும் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் திரு பிரேமதாஸாவுக்கு எதிராகக்குரலெழுப்பப்போகின்றனர் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இடைக்கால அரசாங்கம் ஏற்படும் பட்சத்தில் தாம் பிரதமராக விரும்பவில்லையென்றும் அவர் வலியுறுத்தி கூறியுள்ளார்.

மேலும் தற்போதைய நிலை நீங்கி இலங்கை ஒரு தேசமாக முன்னேற வேண்டுமானால் கட்சிபேதங்களுக்கும் இனப்பிரச்னைகளுக்கும் நல்ல முடிவு காணப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (வி)

ரயில் பிரயாணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புறப்படவுள்ளதாக வவுனியா பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எக்ஸ். சொர்ணலிங்கம் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற ஆலய சுகாதாரங்களுக்கிடையிலான குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட திரு. சொர்ணலிங்கம் அங்கு மேலும் பேசுகையில்:

வெறுப்படி ரயில் பயணம் செய்யும் தமிழ் பயணிகள் அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து வவுனியா வருவதற்கிடையில் ரயிலிலே பாதுகாப்பு ஊழியர்கள் பயணிகளின் பொதிகளை சோதனையிடுவதாகவும் அப்போது பொதிகளில் இருக்கும் கவர்ச்சியான பொருட்களை எடுத்துக் கொள்வதாகக்கூறினார். (வி)

நடிகர் தேவை

தொலைக்காட்சிப் படமொன்றில் நடிப்பதற்கு ஒரு நடிகர் தேவை. 60 வயது மதிக்கத்தக்க, சாதாரண தோற்றமுடையவராகவும் ஓரளவு குரல் வளமுடையவராகவும் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் வேண்டியதில்லை. படத்தில் நடிக்கும் ஆர்வம் போதுமானது.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 1991-10-07 [திங்கள்] காலை 10 மணிக்கு [சரியாக] நிதர்சனம் செயலகத்தில் சமுகமளிக்கவும்.

"நிதர்சனம்"
தீப் வீதி,
திருநெல்வேலி,
தமிழீழம்,

[எ 1629]

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் சகல பேக்கரி உரிமையாளர்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்கின்றோம். தவறாது சமுகம் அளிக்கவும்.

காலம்: 6-10-1991 காலை 10-30

இடம்: இல. 3, கண்டி வீதி,
பஸ்தியன் சந்தி, யாழ்ப்பாணம்.

N. பாலவினாயகர்
செயலாளர்
யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

[சி-5446]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அதாவது ஈழநாடு யாழ்ப்பாணம் வெல்லோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice Lanka under License Number R/10836/81.

நன்றி நவிலல்

சரவணமுத்து கந்தையா 3-10-91இல காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், சொக்கலிங்கத்தின் மைத்துனரும், ஜெயலட்சுமி, தவமணிதேவி, இந்திராணி ஆகியோரின் தகப்பனாரும், தியாகராஜா, தியாகலிங்கம், சண்முகசுந்தரம் ஆகியோரின் மாமனாரும், ஜெயந்தி, சாந்தி, வசந்தி, ராஜன், சுகந்தி, வாணி, பாலா, கௌரி, கலா, ஜெயா, சிறி, நந்தன், பாப்பா, பாபு, ரெனு ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாருடைய ஈமக்கிரிகைகள் 03-10-91 அன்று மாலை 5.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. ஈமக்கிரியையில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

29/3, பிறவுன் ரோட்,
2-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[எ 1629]